ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1859/24 - 2014 අප්‍රේල් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.04.24

*1859/24 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*இறப்பெய்தியமை காரணமாக வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*நங்காமிகே பியதாஸ என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும் ;*

*இப்போது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலின்போது அடுத்த கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற திரு. வீரசிங்க திசாநாயகே அச்சிரகெலும் சம்பத் திசாநாயக என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ள வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பொ. குகநாதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*வவுனியா,*
*2014, ஏப்பிறல் 01.*

*5 - 182*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*